சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி
முன்னிலை: **திருமதி.P மோகனவள்ளி, B.A., M.L.,**
சார்பு நீதிபதி பொள்ளாச்சி

2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 17 ஆம் நாள் வியாழக்கிழமை

(2055 திருவள்ளுவராண்டு குரோதி வருடம் புரட்டாசி திங்கள் 31ம் நாள்)

இடை மனு எண்.1/2024

–in–

அசல் வழக்கு எண். 32/2024

C.S.காளியப்பன், த/பெ. சண்முகக்கவுண்டர், வசிப்பிட முகவரி கதவு எண்.2/165, சித்தூர்காரர் தோட்டம், அம்பராம்பாளையம், ஆனைமலை வட்டம், கோயமுத்தூர் மாவட்டம் – 642 103.

...மனுதாரர்/ வாதி

/எதிராக/

G. உதயகுமார், த/பெ. P. கோவிந்தராஜ், வயது 35, இந்து, வசிப்பிட முகவரி கதவு எண்.205A, செம்மணாம்பதி மெயின் ரோடு, ஒடையகுளம் கிராமம் மற்றும் அஞ்சல், ஆனைமலை தாலூக்கா, கோயமுத்தூர் மாவட்டம் – 642 129.

... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுவானது உரிமையியல் நடைமுறை சட்டம் வகுமுறை 38 விதி 5ன் கீழ் மனுதாரர், எதிர்மனுதாரருக்கு தக்க ஜாமீன் உடனடியாக ஒப்படைக்கும் படியும் இல்லாவிடில் மனுச்சொத்தினை மேற்படி அசல் வழக்கின் தீப்புக்கு முன் ஜப்தி செய்து உத்தரவிட்டும் இம்மனுவின் விசாரணை முடியும் வரை இடைக்கால முன் ஜப்தி செய்ய உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் செய்த நாள் 16.02.2024

இம்மனுவானது, கடந்த 17.10.2024 ஆம் தேதியன்று இறுதியாக என் முன்பு விசாரணைக்கு வரப்பெற்றபோது, மனுதாரர்/வாதிக்காக வழக்கறிஞர்

திரு.T.மனோகர் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்காக வழக்கறிஞர் திரு.R.சேனாதிபதி அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு ஆவணங்களை பரிசீலனை செய்தும், வாதுரைகளைக் கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

இறுதி உத்தரவு

1) முடிவாக மனுவானது அனுமதிக்கப்பட்டு உத்திரவிடப்படுகிறது.

2) மனுச்சொத்தை பற்றுகை செய்ய வாய்தா 07.01.2025. படி கட்ட வாய்தா 2 நாட்கள்.

**செலவுத் தொகை பட்டியல்**

| மனுதாரர் தரப்பு | எதிர்மனுதாரர் தரப்பு |
|---|---|
| --- | ---- |

**சொத்து விபரம்**

திருப்பூர் பதிவு மாவட்டம், ஆனைமலை உபபதிவு மாவட்டம், ஆனைமலை வட்டம், ஒடையகுளம் கிராமம் ஊர்க்கட்டில் நத்தம் எண். 925/1A ல் புதிய புல எண்.1386/10 செம்மாணம்பதி ரோட்டில் 9 செண்டிற்கான எல்லைகளும் அளவுகளும்,

| | |
|---|---|
| செமணாம்பதி கிழமேல் ரோட்டுக்கும் | – வடக்கு |
| சென்னியப்பகவுண்டர் இடத்திற்கும் | – மேற்கு |
| விநாயகர் கோவில் இடத்திற்கும் | – தெற்கு |
| கிருஷ்ணசாமி இடத்திற்கும் | – கிழக்கு |

இதன் மத்தியில்

| | |
|---|---|
| தென்தலை கிழமேலடி | – 70 |
| வடதலை கிழமேலடி | – 70 |

மேதலை தென்வடலடி – 55

கிழதலை தென்வடலடி – 55

இந்த அளவுகள் உள்ள 9 செண்ட் இடத்தில் ஏற்கனவே 3 செண்ட் விற்றது போக மீதமுள்ள 6 செண்டில் கிழபுறமாக உள்ள இடம், வீட்டிற்கு சக்குபந்தி அளவுகளும்,

புதிய புல எண். 1385 க்கும்,

செம்மனாம்பதி மெயின் ரோட்டிற்கும் – வடக்கு

புதிய புல எண். 1386/9 க்கும்,

முன்பு கிருஷ்ணசாமி வீடு இருந்து

தற்போது ஈஸ்வரி, மணியன் வீட்டிற்கும் – கிழக்கு

புதிய புல எண். 1386/11 க்கும்,

முன்பு சென்னியப்பகவுண்டர் இடமாக இருந்து

முத்துக்குமார் வீட்டிற்கும் – மேற்கு

புதிய புல எண்.1386/14 பி–க்கும்,

விநாயகர் கோவில் இடத்திற்கும் – தெற்கு

இதன் மத்தியில்

தென்தலை கிழமேல் – 14.08 மீட்டர் (46.32 அடி)

வடதலை கிழமேல் – 14.08 மீட்டர் (46.32 அடி)

மேதலை தென்வடல் – 16.72 மீட்டர் (55 அடி)

கிழதலை தென்வடலடி – 16.72 மீட்டர் (55 அடி)

இந்த அளவுகள் கொண்ட 2547.5 சதுரடிகள் அல்லது 236.67 சதுர மீட்டர் மனையிடமும், மேற்படி இடத்தில் சுமார் 25 வருடத்திற்கு முன்பு 1000 சதுரடியில் கட்டப்பட்டுள்ள ஓட்டு வீடும், மேற்படி வீட்டிற்குண்டான மின்வரி மற்றும் குடிநீர் வரி இதன் உபகரணங்களுடன் காப்புத் தொகையும், மேற்படி இடம், வீட்டிற்கு போக வர உண்டான மாமூல் வழி நடை தட பாத்தியங்கள் வகையறா சகிதம்.

தற்போது மேற்படி வீடு, செமாணம்பதி ரோட்டில் உள்ளது. மேற்படி வீட்டின் கதவு எண்.13, வார்டு எண். 14, மின் இணைப்பு எண். 03-330-001-397, வீட்டு வரிவிதிப்பு எண். 3216, குடிநீர் இணைப்பு எண். 230 ஆகும். மேற்படி சொத்துக்கள் ஒடையகுளம் பேரூராட்சிக்கு உட்பட்டது.

இன்று 2024 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 17 ம் நாள் என் கையொப்பமும் இந்நீதிமன்ற முத்திரையுடன் வழங்கப்பட்டது.

**ஒப்பம்/-(P.மோகனவள்ளி)**
**சார்பு நீதிபதி, பொள்ளாச்சி**

**இறுதி உத்தரவு**

இ.ம.எண்.01/2024

அ.வ.எண். 32/2024

நாள் 17.10.2024

சார்பு நீதிமன்றம்,
பொள்ளாச்சி.